செய்தி வெளியீடு எண்.203 நாள்.14.04.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் 127 –வது பிறந்த நாள் நல்லிணக்க தினம் மற்றும் ரொக்கமில்லா மின்னணு பண பரிவர்த்தனை (டிஜிதன் மேளா - Digi Dhan Mela)-யை குறித்த நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் 167 பயனாளிகளுக்கு ரூ. ஒரு கோடியே 4 இலட்சத்தி 50 ஆயிரம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் 127 –வது பிறந்த நாள் நல்லிணக்க தினம் மற்றும் ரொக்கமில்லா மின்னணு பண பரிவர்த்தனை (டிஜிதன் மேளா - Digi Dhan Mela)-யை குறித்த நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் 167 பயனாளிகளுக்கு ரூ. ஒரு கோடியே 4 இலட்சத்தி 50 ஆயிரம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை இன்று (14.04.2017) வழங்கினார்.

ரொக்கமில்லா மின்னணு பரிவர்த்தனையை ஊக்குவிப்பதற்காக நடைபெற்ற நிகழ்ச்சிகளில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களையும் சேர்ந்த மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலமாக கோலப்போட்டிகள் நடத்தப்பட்டது. கடம்பத்தூர் ஒன்றியம், வெண்மணம்பூதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் திருவள்ளூர் ஆர்.எம்.ஜெயின் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் வில்லுப்பாட்டு மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் கலந்துக்கொண்ட மாணவ-மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவு பரிசுகள், கோலப்போட்டியில் வெற்றி பெற்ற மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு முதல் மூன்று பரிசுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

வங்கிகளில் மின்னணு பரிவர்த்தனை குறித்து பல்வேறு வங்கிகளின் சார்பாக அமைக்கப்பட்ட செயல் விளக்க கண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக 32 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தலா ரூ. 1 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 32 இலட்சத்திற்கான நலத்திட்டங்களையும், புது வாழ்வு திட்டம் சார்பாக அமுதசுரபி கடனுதவி திட்டத்தின்கீழ் 25 நபர்களுக்கு ரூ. 7 இலட்சத்தி 50 ஆயிரத்திற்கான நலத்திட்டங்களையும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக சட்டத்தொழில் துவங்க நிதியுதவி கோரி விண்ணப்பத்திவர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரம் வீதம் மானியத் ஊக்கத் தொகைகள் 70 நபர்களுக்கு மொத்தம் ரூ.35 இலட்சத்திற்கான நலத்திட்டங்களும், மாவட்ட தொழில் மையம் சார்பாக இளைஞர்களுக்கு சுயவேலை உருவாக்கும் திட்டத்தின்கீழ் 40 நபர்களுக்கு ரூ.30 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் என மொத்தம் 167 நபர்களுக்கு ரூ. 1 கோடியே 4 இலட்சத்தி 50 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.ச.சா.குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. த.இராஜேந்திரன், மாவட்ட தகவல் அலுவலர் திரு.பழனிசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி. சிவகாமி, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கே.ரா.திவ்யஸ்ரீ, திருவள்ளூர் வட்டாட்சியர் திருமதி.கார்குழலி, அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~